**செய்தி வெளியீடு எண்: 50** **நாள்: 22.01.2013**

**<u>செய்தி வெயியீடு</u>**

இன்று **(22.01.2013) பிற்பகல் 12.00** மணியளவில் தலைமைச்செயலகம் **நாமக்கல் கவிஞர் மாளிகையில் பள்ளிகல்வித்துறை கூட்டரங்கில் ( 6 வது தளம்) மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்** அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில்

- **மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்களால் அரசு கலைக்கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஒதுக்கப்பட்ட ரூ. 100 கோடியை பயன்படுத்துவது குறித்தும், மேலும்
- 2011–2012, 2012–2013 தொடங்கப்பட்ட புதிய 22 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள், 10 தொழில்நுட்ப கல்லூரிகள் 2 பொறியியல் கல்லூரிகள் மற்றும் IIIT கல்லூரி ஒன்று ஆகியவைகளை தொடங்குவதற்கு புதிய இடங்களை தேர்வு செய்வது தொடர்பாக தற்போதைய நிலை.
- சூரிய சக்தி கொள்கை 2012–னை அனைத்து கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் அமுல்படுத்துவது தொடர்பாக. புதியதாக கட்டப்படும் கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைப்பது போல புதிய கல்லூரிகளில் சோலார் (Solar Energy) வசதியை ஏற்படுத்துவது.
- சில தனியார் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அரசின் முன் அனுமதியின்றி தொடங்கப்படும் பாடப்பிரிவுகள் அங்கீகரிக்கப்படாத நிலை ஏற்படும்போது அப்பாடங்களுக்கு சமமான தகுதி (Equalance Certificate) கோருவது மற்றும் பல பொருள்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர், திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., தொழில்நுட்ப கல்வி ஆணையர் திரு. ரமேஷ்சந்த் மீனா இ.ஆ.ப., இணைச் செயலாளர் திருமதி. உமாமகேஸ்வரி இ.ஆ.ப. கல்லூரி கல்வி இயக்குநர் திருமதி. செந்தமிழ்ச்செல்வி, உயர்கல்வித்துறை உயர் அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**